RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING    மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 235 | ஆகஸ்டு.27 2025 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!


சென்னை: ஆக.27-

முதல்வரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டது. அதன்படி, தமிழகத்தில் நகர்ப்புற அரசு உதவி பெறும் பள்ளிகளில் முதல்வரின் காலை உணவுத் திட்டத்தை பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான் முன்னிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (ஆக.26) தொடங்கி வைத்தார்.

சென்னை மயிலாப்பூர், புனித சூசையப்பர் தொடக்கப்பள்ளியில் நடைபெற்ற இந்த விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், தமிழகத்தை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்றனர். காலை 8.30 மணி அளவில் முதல்வர் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான் ஆகியோர் மாணவர்களுக்கு உணவு பரிமாறி முதல்வரின் காலை உணவுத் திட்டத்தை அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு விரிவு செய்து வைத்தனர். பின்னர் நடைபெற்ற விழாவில் முதல்வர் ஸ்டாலின், பஞ்சாப் மாநில முதல்வர் பகவந்த் மான் உள்ளிட்டோர் பேசினர்.




முன்னதாக, முதல்வரின் காலை உணவுத் திட்டத்தின் சிறப்பை குறிப்பிடும் வகையில் சிறப்பு வீடியோ ஒன்றை தமிழக அரசு வெளியிட்டது. சுமார் 3.43 நிமிடங்கள் ரன் டைம் கொண்ட இந்த வீடியோவில் இந்த திட்டம் தொடங்கப்பட்டதற்கான காரணம், தொடங்கப்பட்ட நாள், அடுத்தடுத்த விரிவாக்கம், அதன் மூலம் மாணவர்கள் பெற்ற பலன் உள்ளிட்டவை குறிப்பிடப்பட்டுள்ளது.



# மாநகராட்சியின் 32 சேவைகளை வாட்ஸ்அப்பில் வழங்கும் திட்டம்: மேயர் பிரியா தொடங்கி வைத்தார்

சென்னை, ஆக.27-

மாநகராட்சியின் 32 சேவைகளை வாட்ஸ்அப்பில் வழங்கும் திட்டத்தை, ரிப்பன் மாளிகையில் மேயர் ஆர்.பிரியா தொடங்கி வைத்தார். மக்கள் எவ்வித அலைச்சலுமின்றி, தாங்கள் இருந்த இடத்திலிருந்து இச்சேவைகளை பெற முடியும்.

இது தொடர்பாக, சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக் குறிப்பு: சென்னை மாநகராட்சி மக்களுக்கான சேவைகள் தற்போது நம்ம சென்னை செயலி, மாநகராட்சியின் இணையதளம் (www.chennaicorporation.gov.in), 1913 அழைப்பு மையம், சமூக வலைதளங்கள் வாயிலாக வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், மேயர் ஆர்.பிரியா 2025-26ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், சென்னை மாநகராட்சியில் மக்களுக்கான சேவைகள் அனைத்தும் வாட்ஸ்அப் வழியாக வழங்கப்படும் என அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, தமிழகத்திலேயே முதன் முறையாக சென்னை மாநகராட்சியில் வழங்கப்படும் பொதுமக்களுக்கான சேவைகள் அனைத்தும் வாட்ஸ்அப்பில் வழங்கும் திட்டத்தை மேயர் ஆர்.பிரியா ரிப்பன் மாளிகையில் நேற்று தொடங்கிவைத்தார். இதற்கான வாட்ஸ்அப் சாட்பாட் (Whatsapp Chatbot) சிறந்த டிஜிட்டல் தொழில்நுட்பத்தில், நிபுணர்களின் ஆலோசனைகளை மேற்கொண்டு, மக்கள் மிக எளிதாகப் பயன்படுத்தும் வகையில், செயற்கை நுண்ணறிவு பயன்பாட்டுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள், மாநகராட்சியின் சேவையை தற்போது உருவாக்கப்பட்டுள்ள 94450 61913 எனும் வாட்ஸ்அப் எண்ணை தங்கள் கைபேசியில் முதலில் பதிவு செய்து கொள்ள வேண்டும். இதைத் தொடர்ந்து, இந்த வாட்ஸ்அப் சாட்பாட் எண்ணுக்கு 'Hi' அல்லது 'வணக்கம்' என பதிவிட வேண்டும். பின்னர், மாநகராட்சியின் சேவைகளை அதில் உள்ள உரிய வழிகாட்டலுடன் உள் நுழைந்து பெற்றிட வேண்டும்.

இதில் பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ் தொடர்பான சேவைகள், சொத்து வரி செலுத்துதல், புகார் பதிவு, தொழில் வரி செலுத்துதல், வர்த்தக உரிமம் செலுத்துதல் மற்றும் புதுப்பித்தல், ஆவண பதிவிறக்கம், சமுதாயக் கூடம் முன்பதிவு, முதல்வர் படைப்பகம் தொடர்பான சேவைகள், நீச்சல்குளம் முன்பதிவு, செல்லப் பிராணிகளின் உரிமம் பதிவு, பொதுமக்கள் குறைதீர்க்கும் சேவைகள், நகரமைப்பு தொடர்பான சேவைகள், விண்ணப்பங்கள் கண்காணிப்பு, கடை வாடகை செலுத்துதல், கட்டிடம் மற்றும் கட்டுமானக் கழிவுகள் தொடர்பான பதிவு உள்ளிட்ட மாநகராட்சியின் 32 வகையான சேவைகளை மக்கள் எவ்வித அலைச்சலுமின்றி தாங்கள் இருந்த இடத்திலிருந்து பெற முடியும்.

இதில், தமிழிலும், ஆங்கிலத்திலும் பதிவிட முடியும். இந்த வாட்ஸ்அப் எண்ணில், மண்டல அலுவலகம், வார்டு அலுவலகம் கண்டறிதல், அருகில் உள்ள வசதிகளைத் தெரிந்து கொள்ளுதல், பள்ளிக் கூடங்கள், கழிப்பிடங்கள், பேருந்து நிறுத்துமிடங்கள், அம்மா உணவகம், மயான பூமி, சமுதாயக் கூடம், ஆரம்ப சுகாதார நிலையம், நகர்ப்புற சமூக சுகாதார மையம், படிவங்கள் பதிவிறக்கம் உள்ளிட்ட சேவைகளையும் பெற முடியும்.

விரைவில் சென்னை குடிநீர் வாரியம் மற்றும் பதிவுத் துறை சேவைகளும் வழங்கப்படும். மேலும், பல்வேறு சேவைகளை எளிதில் பெற கியூஆர் கோடுஜயும் மேயர் பிரியா வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (வரிவிதிப்பு மற்றும் நிதி) சர்பஜெயாதாஸ் நரேந்திரன், துணை ஆணையர்கள் வி.சிவகிருஷ்ணமூர்த்தி, ம.பிரதிவிராஜ், மாநகர வருவாய் அலுவலர் கே.பி. பானுசந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர். இவ்வாறு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'கோவை மாஸ்டர் பிளான் 2041' விஞ்ஞான ஊழலுக்கு வழிவகுக்கும்: இபிஎஸ் குற்றச்சாட்டு

சென்னை: ஆக.27-

"கோயம்புத்தூர் மாஸ்டர் பிளான் 2041ல், நிலப் பரப்புகளை வேறு வகைப்பாட்டுக்கு மாற்ற வழிவகை செய்யப்பட்டுள்ளது. விஞ்ஞான முறையில் ஊழலுக்கு வித்திடும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த திட்டத்தை மறு ஆய்வு செய்து புதிய கோயமுத்தூர் மாஸ்டர் பிளான் 2041ஐ வெளியிட வேண்டும்" என அரசுக்கு அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.






இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழக அரசு அண்மையில் அறிவித்துள்ள கோயம்புத்தூர் மாஸ்டர் பிளான் 2041ல் நிலப் பரப்புகளை வேறு வகைப்பாட்டுக்கு மாற்ற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது கோவை மக்களிடையே பரபரப்பையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

நகர ஊரமைப்பு மற்றும் உள்ளூர் திட்டக் குழுமம் தயாரித்துள்ள கோவை மாவட்ட மாஸ்டர் பிளான் 2041ல் பல முறைகேடுகளுக்கு வழிவகுக்கும் வகையில் கோவை மாநகராட்சியுடன் 4 நகராட்சிகள், 21 பேரூராட்சிகள், 66 கிராம ஊராட்சிகள் உள்ளடக்கிய சுமார் 1531 சதுர கிலோ மீட்டருக்கு புதிய கோயம்புத்தூர் மாஸ்டர் பிளான் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த மாஸ்டர் பிளான் தயாரிப்பில் பொதுமக்களிடம் கருத்துக்கேட்புக் கூட்டம் முழுமையாக நடத்தப்படாமல், கூட்டத்தில் கருத்து வேறுபாடுகளும், சலசலப்பும் ஏற்பட்டதால் கூட்டம் பாதியிலேயே நிறுத்தப்பட்டது. இந்தச் சூழ்நிலையில் பல்வேறு குளறுபடிகளைக் கொண்ட மாஸ்டர் பிளான் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, குடியிருப்பு நில வகைப்பாட்டில் உள்ள நிலத்தினை விவசாயம் மற்றும் தொழில் பிரிவுக்கு மாற்றியுள்ளனர். ஏற்கெனவே வளர்ந்த தொழில் நகரமான கோவையின் நகரப் பகுதியில் நில மதிப்பீட்டுத் தொகை மிகவும் அதிகரித்துள்ள நிலையில், நில மாற்றம் செய்ய அனுமதி வழங்குவதன் மூலம் ஊழலுக்கு வழிவகை செய்வதுடன், பல்வேறு மோசடிகள் நடைபெறவும் வாய்ப்புள்ளதாக சந்தேகம் எழுந்துள்ளது.

நில வகைப்பாடு மாற்றத்தில் ஆளும் திமுக குடும்ப உறுப்பினர்கள் நடத்தும் நிறுவனம் மற்றும் திமுக குடும்ப உறவுகளுக்கு மிகவும் நெருக்கமானவர்களின் நிலங்கள் என சுமார் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள், குடியிருப்பு மனை நில வகைப்பாட்டிலேயே இருக்கும் வகையில், கோயம்புத்தூர் மாஸ்டர் பிளான் 2041ஐ, விஞ்ஞான முறையில் ஊழலுக்கு வித்திடும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 4 ஆண்டு காலத்தில் விவசாயிகளுக்கு எந்த உதவியும் செய்திடாத இந்த திமுக அரசு, பொதுமக்கள் கருத்துக்கேட்பு இன்றி, திட்டமிடப்படாத கிராமப் பகுதிகளையும் இணைத்து கோயம்புத்தூர் மாஸ்டர் பிளான் 2041 தயாரித்து குறிப்பிட்ட தரப்பினர் லாபம் ஈட்டும் வகையில் ஊழலுக்கு வழி ஏற்படுத்தியதோடு மட்டுமல்லாமல், அரசு ஏதோ சிறப்பாக செயல்படுவதுபோல் மாயத்தோற்றத்தை ஏற்படுத்த, இந்த மாஸ்டர் பிளான் மூலம் விடியா திமுக அரசு முனைகிறது என கோவை மக்களிடையே பரவலாக பேசப்பட்டு வருகிறது.

இத்தகைய சூழ்நிலையில் அறிவிக்கப்பட்டுள்ள கோயம்புத்தூர் மாஸ்டர் பிளான் 2041ன்படி, நில வகைப்பாடு மாற்றங்களால் சுமார் 50,000 ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்படும் என்றும், ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் முறைகேடு நடைபெற வாய்ப்புள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எனவே, தற்போது வெளியிட்டுள்ள கோயம்புத்தூர் மாஸ்டர் பிளான் 2041ன்படி, நகர ஊரமைப்புத் திட்டத்தில் இணைத்துள்ள பகுதிகளில் நிலவகைப்பாடு மாற்றங்களை மறு ஆய்வு செய்து, பொதுமக்களின் கருத்துக்கேட்புக் கூட்டங்களை முறையாக நடத்தி, அதன்படி திருத்தங்கள் செய்து புதிய கோயமுத்தூர் மாஸ்டர் பிளான் 2041ஐ வெளியிட இந்த திமுக ஸ்டாலின் மாடல் அரசை வலியுறுத்துகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

# மேட்டூர் அனல் மின் நிலைய உலர் சாம்பல் விற்பனை முறைகேடு: விசாரணை அறிக்கை தாக்கல் செய்ய ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஆக.27-

தமிழ்நாடு மின் வாரியத்துக்கு சொந்தமான திருவள்ளூர், தூத்துக்குடி, சேலம் உள்பட ஐந்து அனல் மின் நிலையங்களில் வெளியாகும் உலர் சாம்பலில், 10 சதவீதம் சிறு, குறுந் தொழில் நிறுவனங்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. மீதம் மற்ற நிறுவனங்களுக்கு விற்கப்படுகிறது.

சேலம் அனல் மின் நிலையத்தில் உலர் சாம்பல் சிறு, குறு நிறுவனங்களுக்கு பகிர்ந்து அளிக்கப்படாமல், மாவட்டத்தில் உள்ள முத்துகுமார் டிரேடர்ஸ் என்ற நிறுவனத்துக்கு, சட்ட விரோதமாக வழங்கப் படுகிறது எனவும், இந்த உலர் சாம்பல், அந்த நிறுவனம் வெளிச்சந்தையில் அதிக விலைக்கு விற்பதாகவும், இந்த முறைகேடு குறித்து, கடந்த ஜனவரி 31ம் தேதி தமிழக மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக இயக்குனருக்கு அளித்த மீது, நடவடிக்கை எடுக்க, மின்வாரிய இயக்குனருக்கு உத்தரவிட வேண்டும் என, சேலம் மாவட்டத்தை சேர்ந்த சந்தோஷ் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், மனுதாரர் எழுப்பிய குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்தப்பட்டதா என்பது குறித்த ஆவணங்களுடன் நேரில் ஆஜராகும்படி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக இயக்குனருக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீ வஸ்தவா மற்றும் நீதிபதி சுந்தர் மோகன் அமர்வில் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்த போது, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக இயக்குநர் கோவிந்த ராவ் நேரில் ஆஜராகி, உலர் சாம்பல் ஒதுக்கீடு தொடர்பான ஆவணங்களை தாக்கல் செய்தார்.

கடந்த ஜனவரி மாதம் அளித்த புகார் மீது உடனடியாக விசாரணை நடத்தாதது ஏன் என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதில் அளித்த தமிழக அரசின் தலைமை வழக்கறிஞர், தினந்தோறும் ஐந்துக்கும் மேற்பட்ட புகார்கள் வருவதாகவும், உயர் நீதிமன்ற உத்தரவுக்குப் பிறகு, மனுதாரர் தெரிவித்த புகார் தொடர்பாக விசாரிக்க மூன்று பேர் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் விளக்கம் அளித்தார்.

இதையடுத்து, இலவசமாக வழங்கப்பட்ட உலர் சாம்பல், அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக மனுதாரர் குற்றம்சாட்டியுள்ளது குறித்து இந்த குழுவினர் விசாரித்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் நியமித் துள்ள குழுவுக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை எட்டு வாரங்களுக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டனர்.

# "எந்த நம்பிக்கையில் ஐயப்ப மாநாட்டில் முதல்வர் ஸ்டாலின் பங்கேற்கிறார்?" தமிழிசை

கோவை, ஆக.27-

பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் கோவை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: முதலமை ச்சர் மு.க.ஸ்டாலின் தமிழகத்தில் நடைபெறும் இந்து மத பண்டிகைகளுக்கு வாழ்த்து கூறுவதில்லை. ஆனால் கேரள முதல்வர் பினராயி விஜயன் அழைப்பை ஏற்று உலக ஐயப்ப மாநாட்டுக்கு செல்கிறார். இது எந்தவிதமான நம்பிக்கை என அவர் கூற வேண்டும். இந்து மத உணர்வுகளை புண்படுத்தும் விதமாக முதல்வரின் செயல்கள் உள்ளன.



இந்து மதத்தை தீவிரமாக பின்பற்றுபவர் என்ற அடிப்படையில் விசிக வன்னியரசு, ராமர் குறித்து பேசியதை வன்மையாக கண்டிக்கிறேன். சமூக நீதியையும் சமத்துவத்தையும் போற்றுவது கம்பராமாயணமும் ராமரும்தான். சட்டம் ஒழுங்கு சீர்குலைவு காரணமாகவே தமிழகத்தில் சாதிய கொலைகள் நடந்து வருகின்றன.

இதனை தடுக்க தமிழகத்தில் ஏன் சிறப்பு சட்டம் கொண்டுவர முடியவில்லை? தமிழ் முகமூடி அணிந்து கொண்டு சி.பி.ராதாகிருஷ்ணன் வருகிறார் என முதல்வர் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழர்களின் பாதுகாவ லர்கள் என கூறுபவர்கள், ஏன் ஒரு தமிழரை குடியரசுத் துணைத் தலைவராக ஆதரிக்க மறுக்கின்றனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# கன்னியாகுமரி மாவட்டத்திற்கே உரித்தான இயற்கை உணவு வகைகளை பயிரிட விவசாயிகள் முன்வர வேண்டும்

## உயிர்ம வேளாண்மை மற்றும் இதர தொழில் நுட்பங்கள் குறித்த கருத்துக்காட்சி நிகழ்ச்சியில் அமைச்சர் மனோ தங்கராஜ் விவசாயிகளுக்கு வேண்டுகோள்

கன்னியாகுமரி, ஆக.27-

கன்னியாகுமரி மாவட்ட வேளாண்மை துறையின் சார்பில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) திட்டத்தின் கீழ் உயிர்ம வேளாண்மை மற்றும் இதர தொழில் நுட்பங்கள் குறித்த கருத்துக்காட்சி மற்றும் கண்காட்சி நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா தலைமையில் நடைபெற்றது.

இக்கருத்துக் காட்சியினை பால்வளத்துறை அமைச்சர் திரு.தமனோ தங்கராஜ் அவர்கள் பார்வையிட்டு விவசாயிகளிடம் பேசுகையில்

விவசாயத்தை நம்பிதான் உலகம் இயங்குகிறது என்பது அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று. இன்றைய நவீன தொழில்நுட்ப உலகில் வேளாண்மைக்காக பல்வேறு தொழில் நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. நவீன தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு கற்றுக்கொடுப்பதோடு மட்டுமல்லாமல் அதை விவசாயிகள் தங்கள் வயல்களில் செயல்படுத்தி வருமானம் பெற வேண்டும். விவசாயிகள் செயற்கை உரங்களை அதிகமாக பயன்படுத்துவதை குறைத்து இயற்கை உரங்களை பயன்படுத்த வேண்டும்.

பழைய காலத்து விவசாயிகளால் கடைப்பிடிக்கப்பட்ட விவசாய முறைகள் தற்சமயம் இயற்கை வேளாண்மை என்ற புதிய முறையாக பிரதிபலிக்க ஆரம்பித்துள்ளது. பாரம்பரிய முறையில் விவசாயம் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு மேற்கொள்வதால் நாம் ஆரோக்கியத்தோடு வாழ முடியும். பாரம்பரிய நெல் வகைகளான சம்பா, கைகுத்தல் அரிசி, கவுணி, மாப்பிள்ளை சம்பா உள்ளிட்டவைகள் தற்போது உற்பத்தி குறைவாக காணப்படுகிறது. எனவே விவசாயிகள் விவசாயத்தினை மீட்டெடுக்கும் பொருட்டு, இதுபோன்ற பாரம்பரிய நெல்வகைகளை நடவு செய்து, நாஞ்சில் நாட்டு பெருமையினை மீட்டெடுக்க வேண்டும்.

மேலும் நமது மாவட்டத்தில் அதிகளவு வாழை விவசாயம் மேற்கொள் ளப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே அதிகளவு வாழை இரகங்களை நடவு செய்த மாவட்டம் நமது கன்னியாகுமரி மாவட்டமாகும். குறிப்பாக நேந்திரம் வாழை நமது மாவட்டத்தின் மிகவும் பிரபலமான பழவகைகளில் ஒன்று. நேந்திரம் வாழைப்பழத்தினை மதிப்புக்கூட்டி சிப்ஸ், நேந்திரம் மாவு உள்ளிட்ட உணவுப்பொருட்கள் தயாரிக்கப் பட்டு, சந்தைப்படுத்தப்பட்டு வருகிறது. நமது மாவட்டத்திலுள்ள பாரம்பரிய வாழை இனங்களை பள்ளி மாணவ மாணவியர்கள், பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் அறிந்து கொள்ளும் வகையில் கன்னியாகுமரி பழத்தோட்டத்தில் நடவு செய்து, உற்பத்தி செய்யப்பட்டு



பிற மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

நமது கன்னியாகுமரி மாவட்டத்தின் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப விவசாயிகள் மாற்றுவிவசாயத்தினை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக தென்னையில் ஊடுபயிராக கோக்கோ, அவக்கடா, வெண்ணெய்பழம் உள்ளிட்டவைகளை பயிர்செய்து, அதிக இலாபம் பெற வேண்டும். நமது வீடுகளில் முருங்கை உள்ளிட்டவைகளை நாம் வீடுகளில் வளர்க்க வேண்டும். இதன்வாயிலாக நாம் ஆரோக்கியமாக வாழ்வதோடு, அதிக வருமானங்களை ஈட்டி, வாழ்வாதாரத்தை உயர்த்தி கொள்ள விவசாயிகள், விவசாய பிரதிநிதிகளை கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.த.மனோ தங்கராஜ் அவர்கள் பேசினார்கள்.

முன்னதாக வேளாண்மைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகம், பட்டுவளர்ச்சி துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை உள்ளிட்ட துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.த.மனோ தங்கராஜ் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் உள்ளிட்டவர்கள் பார்வையிட்டதோடு, உயிர்ம வேளாண்மை முறையில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக வேளாண்மை மேற்கொள்ளும் 4 விவசாயிகளுக்கு தலா ரூ.5000 ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

நடைபெற்ற கருத்துகாட்சியில் தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தின் தலைவர் திரு.என்.சுரேஷ் ராஜன், நாகர்கோவில் மாநகராட்சி மேயர், திரு.ரெமகேஷ், இணை இயக்குநர் வேளாண்மை திரு.ஜென்கின் பிரகாகர் (பொ), திட்ட ஒருங்கிணைப்பாளர் திருப்பதிசாரம் வேளாண்மை அறிவியல் நிலையம், முனைவர்.எஸ்.சுரேஷ், துணை இயக்கு நர்கள் திருமதி.ரி.ஜாய்லின் சோபியா, (வேளாண் உழவர் பயிற்சி நிலையம் நாகர் கோவில்), திரு.வ.நக்கீரன் (தோட்டக்கலைத்துறை), திரு.வ.ஜோ.ஆரோக்கிய அமல ஜெயன் (மத்திய மற்றும் மாநில திட்டம்), செ.கீதா, (வேளாண் விற்பனை மற்றும் வணிகம்), உதவி இயக்குநர்கள் பொன்ராணி (வேளாண்மை), முனைவர்.ரா.சுரேஷ் (விதை சான்று மற்றும் அங்கக சான்று), பேச்சிப்பாறை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர். ஆ.ஜெயா ஜாஸ்மின், நாகர்கோவில் மாநகராட்சி துணை மேயர் மேரி பிரின்ஸி லதா,வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் ஜெ.ஜெரார்டு, இணை பேராசிரியர் (பயிர் நோயியல்) வேளாண்மை அறிவியல் நிலையம் திருப்பதிசாரம் முனைவர். கவிதா, திருப்பதிசாரம் வேளாண்மை அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் (உணவியல்) முனைவர். செல்வி, முன்னோடி விவசாயிகள், விவசாய பிரதிநிதிகள். விவசாய பெருமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.




■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு பஞ்சாப் மாநில முதலமைச்சர் திரு.பகவந்த்மான் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் சென்னையிலிருந்து நகரப் பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" விரிவாக்கத்தை தொடங்கி வைத்தார்கள். அதனை தொடர்ந்து மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், அல் அமீன் உருது தமிழ் துவக்கப்பள்ளியில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி அவர்கள் திட்டத்தை தொடங்கி வைத்து மாணவர்களுடன் காலை உணவு வழங்கி உணவருந்தினார். மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் உடன் உள்ளார்.




## மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இலவச கண் கண்ணாடிகளை மேயர் இந்திராணி பொன்வசந்த் வழங்கினார்

மதுரை, ஆக.27-

மதுரை மாநகராட்சி இளங்கோ மாநகராட்சி இருபாலர் மேல்நிலைப் பள்ளியில் அர்விந்த் கண் மருத்துவமனை சார்பில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இலவச கண் கண்ணாடிகளை மாண்புமிகு மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் அவர்கள், ஆணையாளர் திருமதி. சித்ரா விஜயன், இ.ஆ.ப., தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.பூமிநாதன் அவர்கள் ஆகியோர் வழங்கினார்கள்.

மாண்புமிகு மேயர், ஆணையாளர் ஆகியோர் வழிகாட்டுதலின் கீழ் மதுரை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ. மாணவிகள் புத்தாக்கம் பெறுவதற்கு மாநகராட்சியின் சார்பில் விளையாட்டு போட்டிகள், மாவட்ட அளவில் மற்றும் மாநில நடைபெறும் பல்வேறு குறு விளையாட்டு போட்டிகள், உயர்கல்வி வழிகாட்டுதல், மற்றும் மேஜிக் ஷோ உள்ளிட்ட பல்வேறு புத்தாக்க பயிற்சிகள் மற்றும் பசுமை நடைபயணம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

மதுரை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் 26 ஆரம்ப பள்ளிகள், 14 நடுநிலைப்பள்ளிகள், 9 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 15 மேல்நிலைப்பள்ளிகள் செயல்பட்டு வருகிறது. இப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களின் நலனை காக்கும்பொருட்டு அர்விந்த கண் மருத்துவமனை குழுவினர் சார்பில் கடந்த ஜீன் மாதம் முதல் மாணவ, மாணவிகளுக்கு கண் மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதில் 226 மாணவ, மாணவிகளுக்கு பார்வை குறைபாடு உள்ளது கண்டறியப்பட்டுள்ளது. பார்வை குறைபாடு உள்ள மாணவ, மாணவிகளின் கண்பார்வையை பாதுகாக்கும் வகையில் இலவச கண் கண்ணாடிகள் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டது.

அதன்படி இன்று (26.08.2025) மதுரை மாநகராட்சி இளங்கோ மாநகராட்சி இருபாலர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்வில் 226 மாணவ, மாணவிகளுக்கு இலவச கண் கண்ணாடிகளை மாண்புமிகு மேயர், ஆணையாளர் ஆகியோர் வழங்கினார்கள். மதுரை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் கண் பரிசோதனை மேற்கொள் ளப்பட்டு கண் குறைபாடு கண்டறியப்ப ட்டவர்களுக்கு இலவச கண் கண்ணாடிகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிகழ்வில் துணை மேயர் திரு.தி.நாகராஜன், அர்விந்த கண் மருத்துவமனை சேர்மன் மரு.ஆர்.டி.ரவீந்திரன், கல்விக்குழுத் தலைவர் திரு.ரவிச்சந்திரன், கல்வி அலுவலர் திரு.ஜெய்சங்கர், மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மகேஸ்வரன், முதன்மை மருத்துவ அலுவலர் மரு.ஸ்ரீகோதை, மாமன்ற உறுப்பினர் திருமதி.வசந்தாதேவி, பள்ளி தலைமை ஆசிரியை திருமதி. உமாமகேஸ்வரி, பள்ளி ஆசிரியர்கள், கல்விப்பிரிவு பணியாளர்கள் மாணவ, மாணவிகள், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தென்காசி மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) வழங்கும்

## வீடியோ ஒளிப்பதிவு மற்றும் வடிவமைப்பு பயிற்சி வழங்கப்படவுள்ளது: மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தகவல்

தென்காசி, ஆக.27-

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) சார்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக தற்போது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு வீடியோ ஒளிப்பதிவு மற்றும் வடிவமைப்பு (Certification in videography and video Editing) பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சியினை பெற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சார்ந்தவர்களாகவும், குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும். பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களாகவும், 18 முதல் 30 வயது வரை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். மேலும் இப்பயிற்சிக்கான கால அளவு மூன்று மாதங்கள் ஆகும்.

இப்பயிற்சியினை முழுமையாக முடிக்கும் இளைஞர்களுக்கு பயிற்சி சான்றிதழ் மற்றும் வேலை வாய்ப்பிற்கு வழிவகை செய்யப்படும். இப்பயிற்சியினை பெற தாட்கோ இணையதளமான (www.tahd-co.com <http://www.tahdco.com/>) என்ற முகவரியில் விண்ணப்பிக்கலாம்.

மேலும் பயிற்சி பெறும் இளைஞர்களுக்கு தங்கும் விடுதி மற்றும் உணவு உட்பட செலவினம் தாட்கோ மூலமாக வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

## மதுரையில் பஞ்சமி நிலங்களை மீட்க கோரி தலீத் விடுதலை இயக்கம் கோரிக்கை



மதுரை, ஆக.27-

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி வட்டம் தென்கரை கிராமத்தில் பஞ்சமி நிலங்கள் தனியார் பள்ளியால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என தலீத் விடுதலை இயக்க தலைவர் கருப்பையா மதுரை மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளார். இம்மனுவில் தமிழக முழுவதும் பஞ்சமி நிலங்கள் பல்வேறு கட்ட போராட்டங்களால் மீட்கபட்டு வருகின்றன. இந்நிலையில் மதுரை தென்கரை கிராமத்தில் அமைந்துள்ள தனியார் பள்ளி பஞ்சமி நிலத்தை ஆக்கிரமித்து கட்டடங்கள் கட்டியுள்ளது. இதை மீட்க கோரி தொடரப்பட்ட வழக்கில் நீதிமன்றம் உத்தரவிட்டும் மாவட்ட வருவாய் அலுவலர் ஆணையிட்டும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க மறுத்து வருகின்றனர். உடனடியாக துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளார்.

"உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானது வருகின்ற 28.8.2025 அன்று

## சிவகங்கை நகராட்சி, கண்டனூர் பேரூராட்சி, கல்லல், மானாமதுரை ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவைகளில் குறிப்பிட்ட பகுதிகளுக்கான முகாம்கள், குறிப்பிட்ட பகுதிகளில் நடைபெறவுள்ளது

மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஆக.27-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானமது, சிவகங்கை மாவட்டத்தில் 15.7.2025 அன்று முதல் செப்டம்பர் 2025 வரை ஒவ்வொரு வாரமும், நான்கு நாட்களில் நாள் ஒன்றுக்கு 6 முகாம் வீதம் மொத்தம் 215 முகாம்கள் நடைபெறவுள்ளது.




அதன்படி, 15.7.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை தொடர்ந்து, வருகின்ற ஆகஸ்ட் 28 ஆம் தேதி சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 7 முதல் 10 வரை உள்ள பகுதிகளுக்கென சிவகங்கை மைக்கேல் கல்வியியல் கல்லூரி வளாகத்திலும், கண்டனூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 10 முதல் 14 வரை உள்ள பகுதிகளுக்கென கண்டனூர் ஆரியகிழவன் தெருவில் அமைந்துள்ள சமுதாயக்கூடத்திலும், கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வெற்றியூர், மலைக்கண்டான், கீழப்பூங்குடி, ஏ.கருங்குளம் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென வெற்றியூர் ஊராட்சியில் அமைந்துள்ள நகரத்தார் கல்யாண மண்டபத்திலும், மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இராஜகம்பீரம், கால்பிரவு, தீர்த்தான்பேட்டை, கீழமேல்குடி ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென இராஜகம்பீரம் ஊராட்சியில் அமைந்துள்ள முஸ்லீம் ஜமாத் திருமண மண்டபத்திலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமானது நடைபெறவுள்ளது.

மேலும், "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களின் வாயிலாக, நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் அந்தந்த துறைகளால் சேவைகள் வழங்கப்படும். அதில், நகர்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 13 துறைகளின் மூலம் 43 சேவைகளும், கிராமப்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 15 துறைகளின் மூலம் 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது.

இதில் சொத்துவரி, குடிநீர் வசதி உரிமங்கள் மற்றும் அனுமதி, கழிவு நீர் இணைப்பு, அடிப்படை வசதிகள், பராமரிப்பு, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள், காலி நிலவரி, தெரு வியாபாரி அடையாள அட்டை, சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் கட்டிட அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவைகள் நகர்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மேலும், பட்டாவில் பெயர் மாற்றம் மற்றும் பட்டா பெயர் திருத்தம், பட்டா சிட்டா நகல், பிறப்பு, இறப்பு சான்று வாரிசு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உள்ளிட்ட மனுக்களுக்கு இம்முகாமில் உடனடி தீர்வு காணும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் மனு அளித்திட விடுபட்ட தகுதியுள்ள பயனாளிகளும் இம்முகாம்களில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொண்டு மனு அளிக்கலாம்.

எனவே, இம்முகாமினை முறையாக பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் வசிக்கும் அந்தந்த பகுதியில் முகாம் நடைபெறும் நாளன்று, உரிய ஆவணங்களுடன் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.




■ சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டத்திற்குட்பட்ட சூரக்குளம் ஊராட்சி பகுதியில் அமைந்துள்ள வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு மண்டப வளாகத்தினையொட்டி, சுதந்திர போராட்ட வீரர்கள் மருது சகோதரர்களுக்கு, செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் ரூ.1,06,90,000/ மதிப்பீட்டில் திருவுருவச்சிலை அமைப்பது தொடர்பாக நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகள் குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தின் கீழ், அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் சிவகங்கை நகராட்சி பகுதியிலுள்ள மன்னர் நடுநிலைப்பள்ளியில் மாணாக்கர்களுக்கு காலை உணவினை வழங்கி தொடங்கி வைத்தார்



சிவகங்கை, ஆக.27-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், நகர் மற்றும் பேரூராட்சி பகுதிகளிலுள்ள அனைத்து அரசு உதவிபெறும் தொடக்க / நடுநிலைப் பள்ளி மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில், தொடங்கி வைக்கப்பட்டுள்ள முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தின் கீழ், கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் அவர்கள், சிவகங்கை நகராட்சி பகுதியிலுள்ள அரசு உதவிபெறும் நடுநிலைப்பள்ளியான மன்னர் நடுநிலைப்பள்ளி மாணாக்கர்களுக்கு காலை உணவினை, மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி அவர்களுடன் வழங்கி, மாணாக்கர்களுடன் அமர்ந்து காலை உணவு அருந்தினார்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நான்காண்டு கால நல்லாட்சியில், தமிழகம் தலைசிறந்த மாநிலமாக உருவெடுக்கும் பொருட்டு, சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அதனடிப்படையில் அனைத்து துறைகளும் சிறந்து விளங்கி வருகிறது. குறிப்பாக, நிதி நெருக்கடியினை சீர்செய்து, நாளுக்கு நாள் பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில், பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து, பொதுமக்களை பயன்பெற செய்து வருகிறார்கள்.

மேலும், கல்வி மற்றும் சுகாதாரத்தினை தனது இரு கண்களாக கொண்டு அதில் கல்விக்கு முதன்மையான இடம் அளித்து, கல்வித்துறைக்கென சுமார் 50 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்து கல்வித் துறையை மேம்படுத்தி, மாணாக்கர்களிடையே கற்றலுக்கான ஆர்வத்தினை ஏற்படுத்தியுள்ளார்கள். அதில், ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கான செயல்படுத்தப்பட்டு வரும் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தின் கீழ் மாணாக்கர்கள் பெருமளவில் பயனடைந்து வருகின்றனர்.

நகர் மற்றும் பேரூராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவிபெறும் தொடக்க / நடு நிலைப் பள்ளி மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில், முன்னதாக அறிவிக்கப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை விரிவுபடுத்திடும் நோக்கில், இன்றையதினம் சென்னையில் முதலமைச்சரின் காலை உணவு விரிவாக்கத் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து சிறப்பித்துள்ளார்கள். இத்திட்ட தொடக்க விழாவில், சிறப்பு விருந்தினராக பஞ்சாப் முதலமைச்சர் திரு.பகவந்த் மான் அவர்களும் கலந்து கொண்டுள்ளது மேலும் சிறப்பிற்குரிய ஒன்றாகும்.

பெற்றோர்களின் சுமையை குறைக்கும் பொருட்டும், பிள்ளைகளின் பசியை போக்கிடும் பொருட்டும், இதனை அரசிற்கு செலவாக கருதாமல் முதலீடாகவும், மூலதனமாகவும் கருதி, மாணாக்கர்களின் பெற்றோராக திகழ்ந்து, இத்திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில் கடந்த 15.9.2022 அன்று பேறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் கீழ் எஸ்.புதூர் ஒன்றியத்திற்குட்பட்ட 47 தொடக்கப்பள்ளிகள் மற்றும் காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட 6 தொடக்கப்பள்ளிகள் என மொத்தம் 53 தொடக்க பள்ளிகளைச் சார்ந்த 3,121 மாணவச் செல்வங்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டமானது தொடங்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக கடந்த 25.8.2023 அன்று மாவட்டத்தில் உள்ள ஊரக மற்றும் பேரூராட்சி பகுதிகளிலுள்ள மொத்தம் 920 அரசு தொடக்க / நடுநிலைப்பள்ளிகளைச் சார்ந்த 31,773 மாணவச் செல்வங்களும் பயன்பெறும் வகையில், இத்திட்டமானது சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், இத்திட்டத்தினை மூன்றாம் கட்டமாக விரிவு படுத்திடும் நோக்கில், கடந்த 15.7.2024 அன்று ஊரகப் பகுதிகளில் உள்ள 113 அரசு உதவி பெறும் தொடக்க/நடுநிலைப் பள்ளிகளைச் சார்ந்த 5,787 மாணவச் செல்வங்களும் பயன்பெறும் வகையில், இத்திட்டமானது சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது, அதன் அடுத்த கட்டமாக தமிழகம் முழுவதும் நகர்ப்புற உள்ளாட்சி பகுதிகளிலுள்ள 2,430 அரசு உதவிபெறும் தொடக்கப்பள்ளிகளைச் சார்ந்த மொத்தம் 3,05,000 மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றையதினம் (26.8.2025) இத்திட்டமானது விரிவு படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, நான்காம் கட்டமாக சிவகங்கை மாவட்டத்தில் நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் உள்ள 57 அரசு உதவிபெறும் தொடக்க/ நடுநிலைப்பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 7,010 மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டமானது விரிவு படுத்தப்பட்டு, சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட மன்னர் நடுநிலைப்பள்ளியில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மொத்தம் நான்கு கட்டங்களின் அடிப்படையில், செயல்படுத்தப்பட்டு வரும் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தின் கீழ் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 1,143 அனைத்து ஊராட்சி ஒன்றிய தொடக்க / நடுநிலைப்பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் தொடக்க / நடுநிலைப்பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மொத்தம் 47,691 மாணவச் செல்வங்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டமானது சிறப்பாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 1920 ஆம் ஆண்டு முதல் மதிய உணவு திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், எம்.ஜி.ஆர் அவர்கள் ஆகியோர்களால் மதிய உணவு திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது. அத்திட்டத்திற்கு சிறப்பு சேர்த்திடும் பொருட்டு, சத்தான உணவு வழங்கிடும் அடிப்படையில், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் வாரத்தில் 5 தினங்கள் முட்டையுடன் கூடிய சத்தான உணவு வழங்கப்பட்டது.

அவ்வழியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மதிய உணவு மட்டுமன்றி, 1 முதல் 5ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு "முதலமைச்சரின் காலை உணவு" சிற்றுண்டி திட்டத்தினையும் அறிவித்து, அதனை விரிவு படுத்திடும் நோக்கில், மாநிலம் முழுவதும் இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விரிவு படுத்தப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டுள்ள இத்திட்டமானது சிவகங்கை மாவட்டத்தின் மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து பள்ளிகளிலும் அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் இன்றையதினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பணியாளர்கள் அந்தந்த பள்ளிகளிலுள்ள சமையலறையினை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரித்து, தாங்கள் சமையல் செய்யவுள்ள ஒவ்வொரு பொருட்களின் காலாவதி தேதியினை சரிபார்த்து, தங்களது பணியினை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் அனைத்து துறைகளை சார்ந்த அலுவலர்கள் மட்டுமன்றி, சம்மந்தப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும், குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம் குறித்தும் திட்ட செயல்பாடுகள் குறித்தும் அவ்வப்போது உரிய களஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும். இதனை கருத்தில் கொண்டு திட்டத்தின் வெற்றிக்கு ஒவ்வொருவரும் உறுதுணையாக இருந்திடும் வகையில் தங்களது பங்களிப்பினை அளித்திடல் வேண்டும்.

இத்திட்டமானது, அருகிலுள்ள மாநிலங்கள் மற்றும் அண்டை நாடான இலங்கை மட்டுமன்றி கனடா போன்ற நாடுகளிலும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு, தமிழகம் முன் மாதிரியான மாநிலமாக திகழ்ந்து வருகிறது என மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் திரு.விஜயகுமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) திரு.மாரிமுத்து, சிவகங்கை நகர்மன்ற தலைவர் திரு.சி.எம்.துரைஆனந்த், சிவகங்கை நகர்மன்ற துணை தலைவர் திரு.கார்கண்ணன், சிவகங்கை நகராட்சி பொறியாளர் திரு.முத்து, பள்ளி தலைமையாசிரியர்கள் திரு.சுந்தரராஜன், திருமதி ராமலட்சுமி, பள்ளி ஆசிரியர்கள், மாணவ செல்வங்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# காட்பாடி கரிகரி ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

வேலூர், ஆக.27-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, கரிகரி ஊராட்சி அலுவலக வளாகத்தில், உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் ஊராட்சி மன்ற தலைவர் தேவராஜ் தலைமையிலும், வட்டாட்சியர் ஜெகதீசன், வட்டார வளர்ச்சி அலுவலர் நந்தகுமார், முன்னிலையிலும் இம்முகாம் நடைபெற்றது.

இம்மு முகாமில் சிறப்பு பார்வை மற்றும் கண்காணிப்பாளராக உதவி இயக்குனர் (ஊராட்சி) திருமால் கலந்துகொண்டு பொது மக்களிடம் மனுக்களை பெற்று அனைத்து துறை அலுவலரிடம் வழங்கி இணையத்தில் பதிவேற்றம் செய்து கொண்டனர். இந்த முகாமில் சமூக நலத்துறை, வருவாய் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, மின்சார த்துறை, வேளாண் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் துறை, இ சேவை மையம், மருத்துவம் மற்றும் மக்கள் நல வாழ்வு துறை பொதுப்பணித்துறை உள்ளிட்ட அனைத்து துறைகள் சார்ந்த அலுவலர்கள் முகாமில் கலந்து கொண்டு பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெற்று உரிய ஆவண ஆணைகளை வழங்கினர்.

# ஸ்ரீவில்லி. வனப்பகுதியில் விலங்குகளின் தாகம் தணிக்கும் குடிநீர் தொட்டி: கூடுதலாக அமைக்க சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

ஸ்ரீவில்லிபுத்தூர், ஆக.27-

ஸ்ரீவில்லிபுத்தூர் வனப்பகுதியில் அமைக்கப்பட்ட தண்ணீர் தொட்டி விலங்குகளுக்கு பெரும் பயன் அளித்துவரும் நிலையில், கூடுதலாக தண்ணீர் தொட்டிகளை அமைக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே உள்ள மேற்கு தொடர்ச்சி மலை ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகமாக அழைக்கப்படுகிறது. இங்கு புலிகள், சிறுத்தைகள், கரடிகள், யானைகள், காட்டெருமைகள், செந்நாய்கள், பெரிய அளவிலான பாம்புகள் என ஏராளமான வன உயிரினங்கள் வசித்து வருகின்றன. இந்த நிலையில், தொடர்ச்சியாக மழை இல்லாததால் தற்போது இந்தப் பகுதியில் இதற்கு முன் எப்போதும் இல்லாத அளவிற்கு தொடர்ச்சியான மழையின்மை காரணமாக கடுமையான வறட்சி நிலவுகிறது. இதனால் வனவிலங்குகள் தண்ணீர் தேடி அலையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு, வனத்துறையினர் பல்வேறு பகுதியில் அமைத்துள்ள குடிநீர் தொட்டி மூலம் தண்ணீர் வழங்கி வருகின்றனர். இந்த நிலையில் வனத்துறையினர் சமீபத்தில் அமைத்த சோலார் பம்ப் தண்ணீர் தொட்டியில் நிரப்பப்படும் தண்ணீர் வன விலங்குகளின் தாகத்தை தணிப்பதற்கு பேருதவியாக உள்ளது. இந்த தொட்டியில் நிரப்பப்படும் தண்ணீரை தேடி வந்து குடித்து யானைகள் உள்ளிட்ட வனவிலங்குகள் தாகம் தணித்துச் செல்கின்றன. இந்தத் தொட்டியில் எப்போதும் தண்ணீர் இருப்பதால் விலங்குகள் எந்த நேரத்திலும் இங்கு வந்து தண்ணீர் அருந்த முடியும். இந்த குடிநீர் தொட்டி பெரும் பயன் அளிக்கும் நிலையில், கூடுதலாக வனவிலங்குகளுக்கு குடிநீர் தொட்டிகள் அமைக்க வேண்டும் என வன ஆர்வலர்கள் வனத்துறையினருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தேமுதிக நிறுவன தலைவர் கேப்டன் விஜயகாந்த பிறந்தநாளை முன்னிட்டு

# தாம்பரம் தெற்கு மற்றும் கிழக்கு பகுதி தேமுதிக சார்பில் கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கப்பட்டது





தாம்பரம், ஆக.27-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் தெற்கு மற்றும் கிழக்கு பகுதி, தேசிய முற்போக்கு திராவிட கழகம் சார்பில் தலைவர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு, தாம்பரம் தெற்கு பகுதி கழக செயலாளர் கேட் எம்.தர்மா, கிழக்கு பகுதி செயலாளர் காந்தி எஸ்.சேகர் ஆகியோர் தலைமையில் 48வது வார்டு செயலாளர் ஆர்.அண்ணாமலை, அவைத்தலைவர் எம்.செளரிராஜன், பொறுப்பாளர் என்.கார்த்திக், இளைஞர் அணி செயலாளர் இமானுவேல், 46 வது வார்டு வட்டச் செயலாளர் டி.காந்தி ராஜ்குமார், அவைத் தலைவர் டி.ஜெயச்ச ந்திரன், வட்ட பொருளாளர் பீட்டர் அந்தோணி, வட்ட துணைச் செயலாளர் அருள் கிரேவுஸ், இளைஞர் அணி செயலாளர் பாண்டி, இளைஞரணி துணை செயலாளர் ஜி.ஹரிஷ் ஆகியோர் ஏற்பாட்டில் 46வது மற்றும் 48வது வார்டுகளிலும் கேப்டன் விஜயகாந்த் முன்னிட்டு திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்து நிகழ்ச்சி நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் தொகுதி பொறுப்பாளரும் செங்கப்பட்டு மாவட்ட துணை செயலாளருமான மா.செழியன் கலந்து கொண்டு கேப்டன் அவர்களின் புகைப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி சுமார் 3 இடங்களில் தேமுதிக கழக கொடியேற்றி வைத்து இனிப்புகள் வழங்கப்பட்டது

இந்த நிகழ்ச்சியில் தேமுதிக நிர்வாகிகள் முன்னாள் பொது குழு உறுப்பினர் டி.அரிகிருஷ்ணன், தெற்கு பகுதி பொருளாளர் வி.எஸ்.லோகநாதன், மாவட்ட வழக்கறிஞர் அணி துணைச் செயலாளர் சுஜாதா நந்தினி, தெற்கு பகுதி துணைச் செயலாளர்கள் ஏழுமலை, தமிழரசி, மாவட்ட பிரதிநிதி பாலமுருகன், கிழக்குப் பகுதி துணைச் செயலாளர் இ குமார், தெற்கு பகுதி மகளிர் அணி செயலாளர் டாக்டர் சுமதி, வட்டச் செயலாளர்கள் கன்னியப்பன், நாகராஜ், சங்கர் மற்றும் தேமுதிக நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தென்காசி நகராட்சிக்குட்பட்ட காட்டுபாவா நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கம் துவக்க விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் கலந்து கொண்டு மாணவ, மாணவியர்களுடன் உணவு அருந்தினார்




தென்காசி, ஆக.27-

தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை மயிலாப்பூர் புனித சூசையப்பர் தொடக்கப் பள்ளியிலிருந்து தமிழ்நாடு முழுவதும் நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தினை காணொளி காட்சி வாயிலாக துவக்கி வைத்ததைத் தொடர்ந்து தென்காசி நகராட்சிக்குட்பட்ட காட்டுபாவா நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கம் துவக்க விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர் கலந்து கொண்டு மாணவ, மாணவியர்களுடன் உணவு அருந்தினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே. கமல்கிஷோர் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் காலை உணவு திட்டம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு பள்ளிகளிலும் 1 முதல் 5 வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இன்றைய தினம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தினை இன்று துவங்கி வைத்துள்ளார்கள். இதன் மூலம் தென்காசி மாவட்டத்தில் பேரூராட்சிகளில் 65 அரசு உதவி பெறும் பள்ளி மற்றும் நகராட்சிகளில் 75 அரசு உதவி பெறும் பள்ளி என மொத்தம் 140 பள்ளிகளில் உள்ள 13,752 மாணவ, மாணவியர்கள் பயனடைவார்கள். இத்திட்டத்தின்கீழ் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகையான காலை உணவு வழங்கப்படும். திங்கள்கிழமை அன்று ரவா உப்புமா, காய்கறி சாம்பார், செவ்வாய்கிழமை அன்று கோதுமை உப்புமா, காய்கறிசாம்பார், புதன்கிழமை அன்று வெண் பொங்கல், காய்கறிசாம்பார், வியாழக்கிழமை அன்று அரிசி உப்புமா, காய்கறிசாம்பார், வெள்ளிக்கிழமை அன்று சேமியாகிச்சடி, காய்கறி சாம்பார் ஆகிய உணவு வகைகள் வழங்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர் தெரிவித்தார்.

அனைத்து மாணவ மாணவியருக்கும் கேசரி, பொங்கல், காய்கறி சாம்பார் வழங்கப்பட்டது. காலை உணவு சுவையாகவும் தரமாகவும் இருந்ததாக உணவு அருந்திய அனைத்து மாணவ , மாணவியரும் மகிழ்ச்சியுடன் கூறினார்கள்.

இந்நிகழ்ச்சியில், தென்காசி நகர் மன்ற தலைவர் சாதிர், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி ரெஜினி, தென்காசி நகராட்சி ஆணையாளர் திரு.ரவிச்சந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) செல்வி, நகராட்சி உதவி பொறியாளர் திருமதி பிரியா, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) திரு.ரா. ராமசுப்பிரமணியன் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியப் பெருமக்கள், பள்ளி குழந்தைகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு முழுவதும் பூக்கள் விலை கடும் உயர்வு: விநாயகர் சதுர்த்தியை ஒட்டி பூக்களுக்கு கிராக்கி

மதுரை, ஆக.27-

தமிழ்நாட்டின் விநாயகர் சதுர்த்தி மற்றும் ஓணம் பண்டிகை கொண்டாட்டத்தை ஒட்டி மலர் சந்தைகளும் பூக்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. மதுரை மாட்டுத்தாவணி மலர் சந்தையில் பூக்கள் வியாபாரம் காலையிலேயே களைகட்டியது. மதுரையின் சிறப்பே மல்லிகை. விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு மல்லிகை கிலோவுக்கு ரூ.600 அதிகரித்து ரூ.2000 வரை விற்கப்படுகிறது. பிச்சி ரூ.1200க்கும், முல்லை ரூ.1000ஆக உள்ளது. கேரளாவில் 10 நாட்கள் கொண்டாடப்படும் ஓணம் பண்டிகையை முன்னிட்டு, கன்னியாகுமாரி மாவட்டம் தோவாளை மலர் சந்தையிலும் பூக்களின் விலை அதிகரித்துள்ளன. சில நாட்களுக்கு முன்பு ரூ.400ஆக இருந்த பிச்சி பூ விலை தற்போது ரூ.1000ஆக உயர்ந்துள்ளது.

அனைத்து பூக்களின் விலையும் தோவாளை மலர் சந்தையில் உயர்ந்துள்ளது. ஓணம் பண்டிகைக்காக திண்டுக்கல் பூ மார்க்கெட்டில் இருந்து வாடாமல்லி, கோழிக்கொண்டை, செண்டுமல்லி, செம்மங்கி, செவ்வந்தி போன்ற பூக்கள் அதிகளவில் கேரளாவுக்கு கொண்டு செல்லப்படுகிறது. இதனால் ரூ.10க்கு விற்பனையான செண்டுமல்லி, தற்போது ரூ.130க்கும், ரூ.20ஆக இருந்த ஒரு கிலோ வாடாமல்லி ரூ.250க்கும் விற்கிறது. சங்கரன்கோவில் மலர் சந்தையிலும் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. பண்டிகைகளை முன்னிட்டு பூக்களின் விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகளுடன், வியாபாரிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.



# காட்பாடி விருதம்பட்டில் கேப்டன் விஜயகாந்த் பிறந்த நாள் விழா

வேலூர், ஆக.27-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, விருதம்பட்டு அருகே தேசிய முற்போக்கு திராவிட கழக நிறுவன தலைவரும் முன்னாள் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான விஜயகாந்த் அவர்களின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு, விருதம்பட்டு முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரும் தேமுதிக காட்பாடி மேற்கு ஒன்றியம் செயலாளருமான சுரேஷ்பாபு தலைமையில் விஜயகாந்தின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் அன்ன தானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக மாவட்ட கழக செயலாளர் புருஷோத்தமன், அவைத் தலைவர் ஜெகதீசன், பொருளாளர் செந்தில்குமார், காட்பாடி சரவணன், முரளி, சங்கர், சீனிவாசன், ஜமுனாராணி, முருகேசன், வேல்முருகன், தயாளன், மாவட்ட இளைஞர் அணி துணை செயலாளர் வேலு, வட்ட செயலாளர் ரமேஷ், வட்ட துணை செயலாளர்கள் பாபு, ஜெயகாந்தன், உட்பட தேமுதிகவினர் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தேமுதிக நிறுவன தலைவர் கேப்டன் விஜயகாந்த பிறந்தநாளை முன்னிட்டு

# ஊரப்பாக்கத்தில் கேப்டன் மன்ற சார்பில் கேக் வெட்டி அறுசுவை உணவு சிக்கன் பிரியாணி வழங்கப்பட்டது

ஊரப்பாக்கம், ஆக.27-

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட ஊரப்பாக்கத்தில் தேசிய முற்போக்கு திராவிட கழகம் சார்பில் தலைவர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு, மாவட்ட கேப்டன் மன்ற செயலாளர் ஊரப்பாக்கம் எம்.ஜி.மூர்த்தி தலைமையில் கேப்டன் விஜயகாந்த் பிறந்தநாளை முன்னிட்டு திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்து 15 கிலோ கேக் வெட்டி அறுசுவை உணவு சிக்கன் பிரியாணி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட கழக செயலாளர் அனகை முருகேசன், காட்டாங்குளத்தூர் ஒன்றிய செயலாளர் சக்திவேல் ஆகியோர் கலந்து கொண்டு கேப்டன் அவர்களின் புகைப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி 15 கிலோ கேக்





வெட்டி இனிப்புகள் வழங்கி அறுசுவை உணவு சிக்கன் பிரியாணி வழங்கினார்கள்

இந்த நிகழ்ச்சியில் தேமுதிக நிர்வாகிகள் மதியரசன், சீ.தீனா, பி.இந்திராஜ், எஸ்.விஜயலட்சுமி ஜேசிபி ராஜேஷ், செல்செல்வம், அருண், உதயா மற்றும் தேமுதிக நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தாம்பரத்தில் தமுமுக சார்பாக முப்பெரும் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகத்தின் 31ம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு மாபெரும் மருத்துவ முகாம் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி

தாம்பரம், ஆக.27-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் தமுமுக சார்பாக முப்பெரும் நிகழ்ச்சி தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் 31ம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் தாம்பரம் மத்திய பகுதியில் கழக கொடியை மூத்த மாவட்ட நிர்வாகி சி.ஜே.சைபுதீன் அவர்கள் கொடியேற்றி வைத்தார்கள்.

தமுமுக சார்பாக இரத்ததான முகாம் மற்றும் இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது.

அதனை தொடர்ந்து தாம்பரம் சண்முகம் சாலையில் பொதுமக்களுக்கு மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சி தாம்பரம் மத்திய பகுதி தலைவர் எம்.ஜலாலுதீன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக மனிதநேய மக்கள் கட்சி





மாநில துணை பொது செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் தாம்பரம் எம்.யாக்கூப், தமுமுக தலைமை நிர்வாக குழு உறுப்பினர் அத்தா ஆர்.எம்.குணங்குடி அனிபா, தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ் ஆகியோர் இணைந்து உணவு வழங்கும் நிகழ்ச்சியை துவங்கி வைத்து பொதுமக்களுக்கு உணவுகள் வழங்கினார்கள்.

இலவச கண் சிகிச்சை முகாம் மற்றும் இரத்த தானம் வழங்கும் நிகழ்ச்சி தமுமுக செங்கல்பட்டு வடக்கு மாவட்ட மருத்துவ சேவை அணி செயலாளர் எஸ்.எஸ்.அப்துல் ரகுமான் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆதிமாறன், திமுக மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் டாக்டர். கிருத்திகா தேவி, விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் சாமுவேல் எபிநேசர், தமுமுக மமக செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் எஸ்.கே. ஜாகிர் உசேன், திராவிடர் கழகம் மாவட்ட தலைவர் பா.முத்தையன், திமுக மாவட்ட சிறுபான்மை பிரிவு துணைத் தலைவர் என்.ஷாஜகான், திராவிடர் கழகத்தின் மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் கல்யாணி மண் ராஜன், வணிகர் சங்கத் தலைவர் காஜா மைதீன் ஆகியோர் கலந்துகொண்டு முகாமை துவங்கி வைத்தார்கள் மேலும் இந்நிகழ்ச்சியில் மனிதநேய மக்கள் கட்சி செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளர் எம்.அப்துல் ரஹீம், செங்கல்பட்டு வடக்கு மாவட்ட பொருளாளர் எம்.சபியுல்லா, மாநில இளைஞர் அணி செயலாளர் எஸ்.தமிம் அன்சாரி, MTS மாநில பொருளாளர் ஏ.ஆசிக் ஹமீது, முன்னாள் மாவட்ட செயலாளர் SRA. இப்ராஹிம், சென்னை மண்டல மருத்துவ சேவை அணி செயலாளர் கே.ஆசாத், மாவட்ட துணைச் செயலாளர் OKN. அப்துல் காதர், B.சாகுல் ஹமீது N.K.மன்சூர் அலிகான் மற்றும் மாவட்ட அணி நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வார்டு நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்





# தாம்பரம் பேபி பள்ளி குழுமம் சார்பில் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தை மண்டல தலைவர் துவக்கி வைத்தார்

தாம்பரம், ஆக.27-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட மேற்கு தாம்பரத்தில் உள்ள பேபி பள்ளி குழுமம் சார்பில் நடைபெற்ற முதலமைச்சர் காலை உணவு திட்டம் பேபி பள்ளியின் தாளாளர் கி.கஜேந்திரன் தலைமையில் தலைமை ஆசிரியர் க.வைஷ்ணவி ஏற்பாட்டில் தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் எம்.சுமதி வரவேற்பிலும் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மாநகராட்சி நான்காவது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளரும் டி.காமராஜ் கலந்துகொண்டு முதலமைச்சர் காலை உணவு திட்டத்தை தொடங்கி வைத்தார் இந்த நிகழ்ச்சியில் திமுக நிர்வாகிகள் மூ.கணபதி, இ.நவீன், குமார், ஜே.டேவிட் திருநீர்மலை புருஷோத்தமன், இ.குமார், சதீஷ், விஜய், பகுதி துணைச் செயலாளர் குமார், கடப்பேரி ராஜா, அரசு அதிகாரிகள் பேபி உயர் மேல்நிலைப் பள்ளியின் ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள நூலகத்தில்

# போட்டித்தேர்வுக்கு தயாராகும் தேர்வர்களுக்கான சிறப்புப் பிரிவினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் துவக்கி வைத்து பார்வையிட்டார்

தேனி, ஆக.27-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள நூலகத்தில் போட்டித் தேர்வுக்கு தயாராகும் தேர்வர்களுக்கான சிறப்புப் பிரிவினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் துவக்கி வைத்து பார்வையிட்டார்.

சமூகத்தின் அறிவு வளர்ச்சிக்கு நூலகம் அத்தியாவசியமானது. சாதாரண மனிதர்களையும் சாதனையாளர்களாக மாற்றியமைக்கும் வல்லமை நூல்களுக்கு உண்டு. நூலகங்களில் அனைத்து வகையான நூல்களும் கிடைக்கும். தமிழ்நாடு அரசின் சார்பில் மைய நூலகம், கிளை நூலகம் என ஊர்தோறும் நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வருகை தரும் பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் என அனைவரும் பயன்பெறும் வகையில் 10.06.2025 அன்று புதிதாக நூலகம் திறக்கப்பட்டது. இந்நூலகத்தில் தமிழ், ஆங்கிலம் மற்றும் பிற மொழி நூல்களும், இலக்கிய மொழிபெயர்ப்பு நூல்கள், சிறார் இலக்கிய நூல்கள் உள்ளிட்ட பல நூல்கள் உள்ளன.

மேலும். தற்பொழுது தமிழ்நாடு அரசின் போட்டித்தேர்வுக்கு தேவையான புத்தகங்களும், குடிமைப்பணிகள் தேர்வுக்கு தேவையான புத்தகங்களும் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வை யிட்டார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.முத்துமாதவன், இரண்டாம் நிலை நூலகர் விஜயமூர்த்தி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், மாவட்ட அளவிலான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகள் 2025ஐ அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தொடங்கி வைத்தார்

சிவகங்கை, ஆக.27-

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், சிவகங்கை மாவட்ட விளையாட்டரங்கில் மாவட்ட அளவிலான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகள் 2025ஐ, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் அவர்கள் முன்னிலையில் தொடங்கி வைத்து தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழகம் முழுவதும் விளையாட்டில் சிறந்து விளங்கி வருபவர்களின் தனித்தி றன்களை வெளிக்கொணரும் வகையில் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு, அதற்கென பல்வேறு வகையான சிறப்பு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறார்கள்.

இந்தியாவின் தலை சிறந்த மாநிலமாக தமிழகம் திகழ்ந்திடும் பொருட்டு, தமிழ்நாட்டிலுள்ள பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் மற்றும் அரசு பணியாளர்கள் பங்கேற்கும் வகையில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளானது ஆண்டு தோறும் சிறப்பாக நடத்தப் பட்டு வருகிறது.

அதன்படி, இளைஞன் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் சார்பில், முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்திட அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, "தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை" விளையாட்டுப் போட்டிகள் தேசிய அளவில் நடத்தப்படும் போட்டிகளுக்கு இணையாக சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

இவ்வாண்டு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டி2025 (Chief Minister's Trophy Games-2025) ஐ நேற்றையதினம் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் சென்னையில் தொடங்கி வைத்துள்ளதைத் தொடர்ந்து, இன்றையதினம் அனைத்து மாவட்டங்களிலும் இப்போட்டியானது, தொடங்கப்பட்டு வருகின்ற 12.9.2025 வரை நடைபெறவுள்ளது.

அதனடிப்படையில், சிவகங்கை மாவட்டத்தில் இன்றையதினம் தொடங்கி வைக்கப் பட்டுள்ள முதலமை ச்சர் கோப்பை 2025க்கான இப்போட்டிகளானது, பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் மற்றும் அரசு பணியாளர்கள் என ஐந்து பிரிவுகளில் ஆண்,பெண் இருபாலரும் பங்கேற்கும் வகையில், 25 வகையான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளும், 7 வகையான மண்டல அளவிலா ன விளையாட்டுப் போட்டிகளும், 37 வகையான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளும் என மொத்தம் ரூபாய் 83.37 கோடி செலவில் நடைபெறவுள்ளது. இதன் மொத்த பரிசுத்தொகை ரூபாய் 37 கோடி ஆகும்.

கடந்த ஆண்டில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பைக்கான



விளையாட்டு போட்டிகளை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் வரலாற்று சிறப்புமிக்க நமது சிவகங்கை மாவட்டத்திற்கு வருகைபுரிந்து நேரில் தொடங்கி வைத்து சிறப்பித்தார்கள்.

குறிப்பாக, கடந்தாண்டு நடைபெற்ற முதலமைச்சர் கோப்பையில் நமது சிவகங்கை மாவட்ட பெண்கள் கோ கோ அணி முதலிடம் பெற்றது. தனிநபர் பிரிவில் சிலம்பம் விளையாட்டு போட்டியில் மானாமதுரையைச் சேர்ந்த மாணவன் வெண்கல பதக்கமும், சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த மாணவி தங்க பதக்கமும் வென்று பெருமை சேர்த்துள்ளார்கள். பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பிரிவில் வெற்றி பெறும் மாணவ மாணவிகள் அரசின் சொந்த செலவின் அனுப்பி வைக்கப்பட்டு, மாநில போட்டியில் கலந்து கொள்ள உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், கேலோ இந்தியா பயிற்சி மையம் தொடங் கப்பட்டு, பயிற்சியாளர் பணியமர்த்தப்பட்டுள்ளார். இம்மைதானத்தில் ஸ்டார் அகாடெமி பயிற்சி மையம் தொடங்கப்பட்டு, அதற்கென பயிற்சியாளர் பணியமர்த்தப்பட்டு, மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

கடந்த நான்காண்டுகளில், இவ்விளையாட்டு அரங்கத்தை சுற்றிலும் 1,100 மீட்டர் பொதுமக்கள் பயன்படுத்தும் நடைபாதை, மின் விளக்குகள், தார் சாலை, அலங்கார விளக்குடன் கூடிய முகப்பு, இறகு பந்து உள் விளையாட்டரங்கம், நீச்சல் குளத்தில் பார்வையாளர் மாடம், மாடுகள் உள்ளே வருவதை தடுக்கும் வண்ணம் தடுப்பு கம்பிகள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுதவிர, அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் மினி ஸ்டேடியம் அமைக்கப்படும் என்ற உத்தரவிற்கிணங்க காரைக்குடியில் மினி ஸ்டேடியம் கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. மானாமதுரை சட்டமன்ற தொகுதியில் மினி ஸ்டேடியம் அமைப்பதற்கான உத்தரவு பெறப்பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்ட தலைமை யிடமான சிவகங்கையில் மாவட்ட விளையாட்டரங்கம் உள்ளது. திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் மினி ஸ்டேடியம் அமைப்பதற்கான அரசாணை விரைவில் பெறப்படவுள்ளது.

இதுபோன்று, விளையாட்டு துறையில் எண்ணற்ற திட்டங்கள் மற்றும் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, விளையாட்டு துறை இமாலய வளர்ச்சி பெற்றுள்ளது. இதன் வாயிலாக விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் அதிக ஆர்வமுடன் இதுபோன்று பல்வேறு போட்டிகளில் பங்கேற்று உயர்ந்த நிலையை அடைகின்றனர்.

மேலும், விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி, தோல்விகள் என்பதை கருத்தில் கொள்ளாமல், முதலில் நாம் அதில் பங்கு கொள்வதை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் பல்வேறு போட்டிகளில் பங்கு கொள்வதன் அடிப்படையில், தங்களது திறன்களை வெளிக்கொணருவதற்கான வாய்ப்பாக அவை அமையும். இதனைக் கருத்தில் கொண்டு தங்களுக்கு விருப்பமான விளையாட்டுப் போட்டிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, அதில் வெற்றி பெற்று, அதன்மூலம் தங்களது வாழ்க்கை தரத்தினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஜி.அரவிந்த் அவர்கள், சிவகங்கை நகர்மன்ற தலைவர் திரு.சிஎம்.துரை ஆனந்த், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் திரு.ரமேஷ்கண்ணன், சிவகங்கை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.சீனிவாசன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய மண்டல முதுநிலை மேலாளர் திரு.பெ.வேல்முருகன், 25 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ராதாகிருஷ்ணகுமார், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கால்பந்து பயிற்றுநர் திரு.கார்த்திக், மவுண்ட் லிட்ரா பள்ளி தாளாளர் திரு.பாலகார்த்திகேயன் உட்பட சம்மந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161